# திருவெறும்பூர் எறும்பீசர் கோயில் வழி அறியலாகும் சங்கத் தமிழ்ப் பண்பாடு

# *THIRUVERUMBUR ERUMBEESWARAR TEMPLE IS RENOWNED FOR ITS UNIQUE BLEND OF SANKATA TAMIL CULTURE*

**வனிதா.சோ**
வரலாற்று துறை, உதவி பேராசிரியர்
ஜெயா கல்வியல் கல்லூரி, திருநின்றவூர், சென்னை- 602024
*E-mail : vanithasomaskanthan1979@gmail.com*
*Cell. No. 9025058986*

**ஆய்வு சுருக்கம்**

இந்தியா நாடு பழம் பெரும் நாடு இப்பழம் பெரும் நாட்டில் இங்கு பழம் பெறும் சங்கால ஆலயங்கள் பல நிறைந்து காணப்படுகின்றன. சங்ககால தென்னிந்தியா ஆலயங்களுக்கு பெயர் போன பகுதி எனலாம் அதிலும் குறிப்பாகத் தமிழகம் தொன்மையான வரலாற்று பாரம்பரியத்தை தனக்கே உரிய பானியில் பின்பற்றி வருகின்றது தமிழக வரலாற்றை அறிந்துகொள்ள சங்க கால இலக்கியங்கள் தொல்லியல் சான்றுகள், நாணயங்கள், கல்வெட்டுகள், சிற்பங்கள் பேன்றவை பெரிதும் துணைபுரிகின்றன. கல்வெட்டுகளாளும், சிற்பங்களாளும் இழைக்கப்பட்டிருக்கும் எறும்பியூர் விமானமும் முகமண்டபமும் திருச்சிராப்பள்ளியின் சிறப்புக்குரிய கலைப்படைப்புகளாகும். இக்கோயிலில் உள்ள சிற்பங்கள் பேரளவின, இடைநிலையின, சிறயன என மூவகைப்படுத்தாலம். பேருருவச் சிற்பங்களாக முகமண்டபக் காவலர்களும், நறுங்குழல் நாயகி சிற்பங்கள் அமைய, இடைநிலையினவாக இறைவன் விமான, முகமண்டப கோட்டச் சிற்பங்களையும், உள்சுற்றுச் சிற்பங்களையும் கொள்ளலாம். இறைவன் திருமுன் பாதச்சிற்பங்களும், தோரணச் சிற்பங்களும், பஞ்சர கிரீவசிற்பங்களும் சிறியனவாக அமைந்து முற்சோழர் கால உளித்திறம் பேசுகின்றன. அவற்றின் சிற்ப்பு அம்சங்களான காவலர்கள் சிற்பங்கள், நறுங்குழல் நாயகி மேலும் இடைநிலைச் சிற்பங்களான கோட்டச் சிற்பங்கள் மற்றும் சிற்றுருவச் சிற்பங்களான பஞ்சர சிற்பங்கள்,

மகரதோரணச் சிற்பங்கள், சிறப்புச் சிற்பங்களான செப்புதிருமேனி, பள்ளியறை நாச்சியார் என பல அழகிய வேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றன. இந்த சிற்பங்கள் விமான முக மண்டபங்களையும், கருவறை வடதோரணத்தையும் மிக அழுகுடன் காட்சி தருகின்றன. இவ்வாறு திருவெறும்பூர் எறும்பீஸ்வரர் கோயில் சிற்பகலையில் மற்றும் கல்வெட்டு வரலாற்று சான்றுகள் தமிழ்ப்பண்பாடில் சிறப்பு பெற்று விளங்குகிறது.

**திறவுச்சொற்கள்**

தமிழ், கோயிற்கலை, எறும்பீசர் கோயில், சங்க்க தமிழ், தமிழர் பண்பாடு

***Abstract***

*India is an ancient and great nation, and this ancient nation is home to numerous historical temples. The southern part of India, particularly Tamil Nadu, has been following its traditional customs and culture in its own unique way. The sculptures in the Erumbeswarar temple, including the guardian statues, Nayaki statues, and other beautiful works of art, are adorned with intricate details and are found in the Vimana, Mukha Mandapa, and the sanctum sanctorum. These sculptures showcase the artistic excellence and historical significance of the Tamil tradition. They are renowned for their beauty and are a testament to the rich cultural heritage of Tamil Nadu.*

***Keywords***

***Tamil, Temple Art, Erumpisar Temple, Shankha Tamil, Tamil Culture***

**முன்னுரை**

இந்தியா நாடு பழம் பெரும் நாடு இப்பழம் பெரும் நாட்டில் ஆலயங்கள் பல நிறைந்து காணப்படுகின்றன. தென்னிந்தியா ஆலயங்களுக்கு பெயர் போன பகுதி எனலாம். அதிலும் குறிப்பாகத் தமிழகம் தொன்மையான சங்ககால வரலாற்று பாரம்பரியத்தை தனக்கே உரிய பானியில் பின்பற்றி வருகின்றது தமிழக வரலாற்றை அறிந்துகொள்ள சங்க கால இலக்கியங்கள் தொல்லியல் சான்றுகள், நாணயங்கள், கல்வெட்டுகள், சிற்பங்கள் பேன்றவை பெரிதும் துணைபுரிகின்றன.

இவ்வாலயங்கள் சங்க காலத்தில் காட்சியளித்த போதிலும் பல்லவர் காலத்தில் தான் அழியா பொருட்களான கருங்கல், சுண்ணாம்பு கொண்டு கட்டப்பட்டது எனலாம். பல்லவர்களுக்கு அடுத்து ஆட்சிக் கட்டில் ஏறிய சோழர் காலத்தில் ஆலய வழிபடும் இடமாகவும் மட்டுமல்லாது வங்கியாகவும், நீதிமன்றமாகவும், நூல் நிலையமாகவும், கலைக்

கூடமாகவும், பலருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வேலை வாய்ப்பு அலுவளமாகவும், மருத்துவமனைகளாகவும், கல்வெட்டுகளின் காட்சிக் கூடமாகவும் செயல்பட்டது எனலாம். அவ்வகை ஆலயங்களில் ஒன்றுதான் திருவெறும்பூர் எறும்பீஸ்வரர் கோயில்.

**தல வரலாறு**

எறும்பீஸ்வரர் கோவில் திருவெறும்பூர் என்னும் இடத்தில் உள்ளது. இது முதலாம் ஆதித்தியர் காலத்தில் கட்டப்பட்ட கோவில் இவரின் காலம் **871-907** காவிரி நதிகரையில் அருகில் பல கோவில்களை கட்டி உள்ளார். இதில் மிக சிறப்பு மிக்க திருதலமாக விளங்குவது இந்த எறும்பீஸ்வரர் திருக்கோவில் சுமார் **200** ஆண்டுகளுக்கு மேல் பழமையான ஓர் மலை கோயிலாக திருவெறும்பூர் எறும்பீஸ்வரர் கோவில் இருக்கிறது. இக்கோயிலில் இறைவன் சிவபெருமான் சுயம்பு லிங்கமாக எழுந்தருளி எறும்பீஸ்வரர் என்றும் அம்பாள் நறுங்குழல் நாயகி, சௌந்தர நாயகி ஆகிய பெயர்களில் வணங்கப்படுகிறார்கள்.

கோயிலின் மூலவரான சுயம்பு லிங்கமான சிவபெருமான் எறும்பு புற்று வடிவில் இருப்பதால் இவறுக்கு அபிசேகங்கள் செய்யமால் எண்ணெய் காப்பு செய்யப்பட்டு பூஜைகள் செய்யப்படுகின்றன. இடது புறமாக சாய்ந்தபடி இருக்கும் புற்று லிங்கத்தின் மத்தியில் ஒரு பிளவு இருக்கிறது. ஆனால் சற்று தூரத்திலிருந்து பார்க்கும் போது லிங்கம் ஒன்றாக இருப்பது போல் காட்சியளிக்கிறது. இதில் வலம் புறம் இருக்கும் புற்று பகுதி சிவன் அம்சமாகவும் இடது புறம் இருக்கும் புற்று பகுதி அம்பாள் அம்சமாகவும் கருதி வணங்கப்படுகிறது. எனவே இந்த புற்று லிங்கத்திற்கு சிவசக்தி லிங்கம் என்கிற ஒரு பெயரும் உண்டு. தினமும் இக் கோயிலின் பூஜைகளின் போது சுவாமிக்கு படைக்கப்படும் உண்ணத்தக்க நெய் வேத்திய பொருட்களை எறும்புகள் வரிசையாக வந்து எடுத்துச் செல்லும் என்றும், சிவபெருமானே எறும்பு வடிவில் வந்து தரிசனம் தருகிறார் எனறும் இத்தகைய நேரத்தில் சிவனை வழிபடுவது மிகவும் சிறப்பு எனவும் கூறுகிறார்கள்.

**கோவில் அமைவிடம்**

திருச்சி – தஞ்சை நெடுஞ்சாலையில் திருச்சியில் இருந்து **10.**கி.மி தொலைவில் உள்ளது திருவெறும்பூர் எறும்பீஸ்வரர் ஆலயம் உள்ளது. சுமார் **250** அடி உயரமுள்ள குன்றின் மீது கோவில் அமைந்துள்ளது. மேலே செல்ல **125** படிக்கட்டுகள் இடையே இளைப்பாற மண்டபங்கள் உள்ளன, குன்றின் கிழக்கு நுழைவு வாசலின் இடதுபுறம் செல்ல விநாயகரும்,

வலப்புறம் செல்ல ஆஞ்சநேயரும் வீற்றிருக்கின்றனர். இது சிறபகலை ஒரு சிறந்த சான்றாகும்.

**சிற்பக்கலை**

சிற்பம் என்பது ஒரு முப்பரிமாணக் கலைப் பொருள் அல்லது நெகிழ்வுத் தன்மை கொண்ட பொருட்களுக்கு உருவம் கொடுப்பது மூலம் உருவாக்கப்படுகிறது. பொதுவாகச் சிற்பங்கள் செய்வதற்காக பயன்படும் பொருட்கள் கற்கள், உலோகங்கள், மரம், மண் என்பவை அடங்குகின்றன. சிற்பங்களை உருவாக்குபவர் சிற்பி எனப்படுகிறார். வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட காலத்திலிருந்து சிற்பக்கலை வளர்ந்து வருகின்றது. மனித நாகரீகத்தையும், அதன் வளர்ச்சிக் கூறுகளையும் எடுத்துக்காட்டும் சான்றுகளில் சிற்பக்கலை இன்றியமையாத ஒன்றாக உள்ளது.

**எறும்பீஸ்வரர் கோவில் சிற்பங்கள்**

கல்வெட்டுகளாலும், சிற்பங்களாலும் இழைக்கப்பட்டிருக்கும் எறும்பியூர் விமானமும் முகமண்டபமும் திருச்சிராப்பள்ளியின் சிறப்புக்குரிய கலைப்படைப்புகளாகும். இக்கோயிலில் உள்ள சிறபங்கள் பேரளவின, இடைநிலையின, சிறயன என மூவகைப்படுத்தாலம். பேருருவச் சிற்பங்களாக முகமண்டபக் காவலர்களும், நறுங்குழல் நாயகி சிற்பங்கள் அமைய, இடைநிலையினவாக இறைவன் விமான, முகமண்டப கோட்டச் சிற்பங்களையும், உள்சுற்றுச் சிற்பங்களையும் கொள்ளலாம். இறைவன் திருமுன் பாதச்சிற்பங்களும், தோரணச் சிற்பங்களும், பஞ்சர கிரீவசிற்பங்களும் சிறியனவாக அமைந்து முற்சோழர் கால உளித்திறம் பேசுகின்றன.

*1)* பேருருவச் சிற்பங்கள், *2)* நறுங்குழல் நாயகி
பேருருவச் சிற்பங்கள்

**காவலர்கள்**

நேடிய திருமேனியராய் விளங்கும் இறைத்திருமுன் காவலர்களில் தெற்கர் வலக்கையால் அச்சுறுத்தி, இடக்கையை அருகிலுள்ள உருள்பெருந்தடிமீது இருத்தியுள்ளார். உடலின் கீழ்பகுதியைக் கருவறைக்காய் ஒருக்கணித்துள்ள அவரது இடுப்புக்கு மேற்பட்ட உடற்பகுதி நேர்நோக்கியுள்ளது. வலப் பாதத்தை பெருந்தடியின் கத்திப்பகுதியில் நிறுத்தியுள்ள அவரது மார்பில் பூக்கள் தைத்த முப்பரிநூல். கீர்த்திமுகத்துடனான சடைமகுடம் அமைந்தபோதும் இருபுறத்தும் பரவி விரியும் சடைப்புரிகளில் அடர்த்தியாக நெருஞ்சிப்பபூக்கள். அன்னக் குண்டலங்கள், சவடி, சரப்பள்ளி, தோராணத் தொங்கள் பெற்ற உதரபந்தம், தோலாடை, முடிச்சுத்தொங்களுடன் இடைக்கட்டு கொண்டுள்ள அவரது கோரைப்பறகளும் இடத்தோள் பின் படமெடுக்கும் பாம்பும்

அச்சுறுத்திபோதும் உதடுகளில் நெகிபும் குறுஞ்சிரிப்பு அவ்வச்சம் நீக்கி வரவேற்கிறது.

**நறுங்குழல் நாயகி**

பெருமண்டபத்திலுள்ள பழந்தேவி சடைமகுடம், மகர குண்டலங்கள், பல்வகைக் கழுத்தணிகள், கைவளைகள், பட்டாடைகள், தாள்செறிகள் அணிந்து, பின்கைகளில் தாமரை மொட்டுக்கள் கொண்டு சமபாதத்தில் நின்றகோலத்தில் நெடிய திருமேனியராய் காட்சிதருகிறார்.

**சங்கர நாரயணார்**

சிவபெருமானும், திருமாலும் இணைந்து காட்சிதரும் இச்சிற்பவடிவம் தமிழ்நாட்டின் மிகச் சில கோயில்களிலேயே காணப்படுகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மேற்குக் கோட்ட இறைவனாக சங்கர நாராயணார் விளங்கும் முற்சோழர் கோயில்களுல் இதுவும் ஒன்று. இம்மாவட்ட முற்சோழர் காலச் சிறபங்களுள் இக்கோயில் சங்கரநாராயணருக்கு சிறப்பிடம் உண்டு.

**ஆலமர் அண்ணல்**

வலக்காலைக் குப்புறப் படுத்துள்ள முயலகன் மீதிருத்தி வீராசனத்திலுள்ள ஆலமர் அண்ணலின் அக்கமாலை ஏந்திய வல முன் கை சின்முத்தி்யிலிருக்க, இட முன் கையில் சுவடி. பின்கைளில் வலப்புறம் பாம்பு. இடப்புறம் தீச்சுடர். தலையின் இருபுறத்து விரிந்து தொங்கும் சடைப்பாரம் குறுக்குச் சடையென்றால் ஒன்றாக கட்டப்பட்டுள்ளது. மகர, பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, அரும்புச்சரம் உள்ளிட்ட கழுத்தணிகள், இடைச்சிற்றாடை, முப்பரிநூல், உதரபந்தம் அணிந்து மலைமீது அமர்ந்துள்ள இறைவன் பின் உயரும் மரத்தின் கிளைகள் விரிந்து படர்கின்றன.

**பிள்ளையார்**

ஊர்த்வஜாநு கரணப் பிள்ளையாரின் பின்கைகளில் வலப்புறம் அங்குசம். இடப்புறம் பாவசம். உடைந்த வலத்தந்தப் பகுதியை வல முன் கையில் கொண்டுள்ள அவரது இட முன் கை அர்த்தரேசிதமாக உள்ளது. கரண்டமகுடம், பட்டாடை அணிந்துள்ள அவரது உயர்த்திய இடக்கால் பாதத்தின் முன் பகுதி தாமரை மலர் முகுளத்தின் மேல் இருத்தப்பட்டுள்ளது.

**சிற்றுருவச் சிற்பங்கள்** :

எறும்பியூர்க் கோயில் கட்டுமானத்தின் மூன்று இடங்களில் முற்சோழர் உளித்திறம் பேசும் சிற்றுருவச் சிற்பங்கள் காணப்படுகின்றன.

அவற்றுள், பஞ்சரத்தில் இடம் பெற்றுள்ள கிரீவசிற்பங்கள் பிற இரண்டினும் அளவில் சற்றே பெரியவை.
பஞ்சரச் சிற்பங்கள், மகரதோரணச் சிற்பங்கள்

**பஞ்சரச் சிற்பங்கள்** :

எறும்பியூர்க் கோயில் விமானத்திலுள்ள ஆறு பஞ்சரங்களில் தென்கிழக்குத் தவிர்த்த ஏனைய ஐந்தின் கிரீவகோட்டங்டகளும் சிற்பங்கள் கொண்டுள்ளன. இவ் ஐந்து சிற்பங்களுமே ஆடற்சிற்பங்களாக அமைந்துள்ளமை எறும்பியூர்க் கோயிலின் தனிச் சிறப்பு எனலாம்.

**மகரதோரணச் சிற்பங்கள்**

விமான, முகமண்டபக் கோட்டங்களின் தலைப்பாய் விளங்கும் மகரதோரணங்கள் ஐந்தும் மேல், இடை, கீழ் என மூன்று அலங்கரா வளைவுகளையும் மூன்றாம் வளைவின் கீழுள்ள உள்வளையத்தில் சிற்பத்தையும் பெற்றுள்ளன. ஐந்து தோரணங்களுமே மேல் வளைவில் கொடிக்கருக்கு அழகூட்டலும் அதற்கு சற்று மேலிருக்குமாறு கவிழ்ந்த ஊமத்தம்பூ போன்ற ஐந்து அலங்கரிப்புகளைப் பெற்றிந்த போதும் இடை, கீழ்வளைவுகளில் மாறுபட்ட செதுக்கல்களைக் கொண்டுள்ளன. கருவறைத் தென்கோட்டம் தவிர, பிற நான்கு தோரணங்களிலும் மகர இணைகளின் வாய்களிலிருந்து வெளிப்பட்டுப் போரிடும் யாளிவீரர்களையே இடைவளைவு கொண்டுள்ளது. அவர்களுள் ஒருவர் கொடியேந்தி வரும் காட்சி முகமண்டபத் தெற்குத் தோரத்தின் தனித் தன்மையாக விளங்குகிறது.

**சிறப்புச் சிற்பங்கள்**

ஆடல், ஊர்தி இறைகள் தவிர்த்த சிற்பங்களில் நான்கினை அவற்றின் செதுக்குத் திறத்துக்காகவும் தனித்தன்மைக்காகவும் விரிவாகப் பார்ப்பது பயன் தரும். சோழர் காலப் பாதச்சிற்பங்களில் அரிதாகக் காணப்படும் சூரிய சந்திரர் இங்கு இணைந்த நிலையில் பறக்கும் கோலத்தில் மிகச் சிறந்த உடலமைப்புடன் கட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**செப்புத்திருமேனிகன்**

இங்குள்ள ஆடவல்லான் தொகுதியில் சிவபெருமான் உமை, மாணிக்கவாசகர் என மூன்று வார்ப்புருவங்கள் உள்ளன. குப்புறப்படுத்துள்ள முயலகன் முதுகின்மீது வலப்பாதத்தைப் பார்சுவமாகப் பதித்து இடக்காலை வலப்புறம் வீசி ஆனந்த தாண்டவக் கோலத்தில் காட்சி தரும் சிவபெருமானின் பின் கைகளில் வலப்புறம் துடி, இடப்புறம் தீச்சுடர், வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை வேழமுத்திரையில் உடலின் குறுக்காக வலப்புறம் வீசப்பட்டுள்ளது.

**பள்ளியறை நாச்சியார்**

கரண்டமகுடம், மகரகுண்டலங்கள், சரப்பளி, முப்பரிநூல், கைவளைகள், பட்டாடை, தாள்செறிகள் அணிந்து தாமரைத் தளத்தில் சுகாசனத்திலுள்ள பள்ளியறை நாச்சியாரின் வலக் கையில் நீலோத்பலம். இடக்கை அருள் முத்திரையில் உள்ளது.

## கல்வெட்டுகள்

எறும்பியூர் கோயிலிலிருந்து 1892இல் **மூன்று** கல்வெட்டுகளும் 1914 இல் 47கல்வெட்டுகளும் இந்திய தொல்லியல் துறையால் படியெடுக்கப்பட்டுள்ளன. 1892இல் படையெடுக்கப்பட்ட **மூன்று** கல்வெட்டுகளும் 1914இல் மீள பதிவாகியுள்ளமையால், இங்கிருந்து பதிவான கல்வெட்டகளை 47ஆகக் கொள்ளலாம் அவற்றின் பாடங்கள் தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி 4, 13, 19, 34 அகியவற்றில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. 34ம் தொகுதி 47 கல்வெட்டுகளின் பாடங்களையும் கொண்டுள்ளது. அவற்றுள் 96, 102ஆம் எண்களின் கீழ்க் பதிப்பிக்கப்பட்டுள்ள பாடங்கள் ஒரே கல்வெட்டின் இரு பகுதிகளாகும். முதறபகுதியை 102 ஆம் எண்ணிட்டும் பிறபகுதியை 96ஆம் எண்ணிட்டும் பதிப்பித்துள்ளனர். முதறபகுதியைக் கண்டராதித்தர் கால முற்றுப் பெறாத கட்வெட்டு என்ற குறிப்போடும் இரண்டாம் பகுதியை, அது 'பன்மர்க்கு யாண்டு இருபத்து மூன்றாவது"என்று தொடங்கியபோதும் கல்வெட்டுக்குரிய மன்னரைப் பரசேகரி வர்மர், முதல் பராந்தகர் என அடையாடப்படுத்தியிருப்பதுடன், கல்வெட்டின் முதறபகுதி கட்டமைப்பில் சிக்கியுள்ளதாகக் குறிப்பிட்டும் பதிப்பித்துள்ளனர்.

தொல்லியல் துறை பதிப்பித்துள்ள இந்த 46 கல்வெட்டுகள் தவிர, இந்நூலாசியர்கள் 1986இல் எறும்பியூர் கோயிலில் மேற்கொண்ட முதல் ஆய்வின் போது 4 புதிய கல்வெட்டுகளும் 1999ஆம் ஆண்டில் நிகழ்ந்த கள ஆய்வில் 5 புதிய கல்வெட்டுகளும் கண்டறியப்பட்டன. 2016ஆம் ஆண்டு மீளாய்வின் போது கண்டறியப்பட்ட பல துண்டுக் கல்வெட்டுகளின் தரவுகளை (கோயிலின் அக, புற மதில்களில் இணைக்கப்பட்டிருந்தவை, அகழ்ந்தெடுக்கப்பட்ட நிலையில் அகமதிலின் தென்சுவர் மீது சாய்த்து வைக்கப்பட்டிருந்தவை) ஒன்றிணைத்த நிலையில் அவை **ஐந்து** புதிய கல்வெட்டுகளை வெளிப்படுத்தியுள்ளன. இந்த 60 கல்வெட்டுகளின் பாடங்களையும் ஆய்வுக்குட்படுத்திய நிலையில் கோயிலின் வரலாற்றையும் ஏறத்தாழ 600 ஆண்டுக் கால எறும்பியூர் சார்ந்த சமுதாய வரவாற்றையும் தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றையும் அறியமுடிந்தது.

## அரசியல் வரலாறு

இங்கிருந்து படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் காலத்தால் முற்பட்டதாக முதலாம் ஆதித்த சோழரின் 18, 19 ஆம் ஆண்டு

ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்ளை குறிக்கலாம். மதுரை கொண்ட பரசேகரிவர்மரான முதலாம் பராந்தகரின் கல்வெட்டுகள் **மூன்று** இங்குள்ளன. வானவியல் குறிப்புகள், உள்ளீடு ஆகியவற்றின் வழிகாட்டலில் கண்டராதித்தர் காலக் கல்வெட்டுகளாக *15* கல்வெட்டுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. உத்தமசோழருடையதாகக் கருதப்படும் பரசேகரிவர்மனின் கட்வெட்டுகள் முதலாம், **இரண்டாம்** இராஜராஜர் காலக் கல்வெட்டுகள் **ஆறாம்** முதலாம் இராஜேந்திரர் காலக் கல்வெட்டுகள் **ஐந்தாம்** முதலாம் இராஜாதிராஜர் காலக் கல்வெட்டு **ஒன்றும்** இங்குள்ளன. சாளுக்கிய சோழர்களின் கல்வெட்டுகளாக *13* உள்ளன. பிற்பாண்டியர்களுள் மாறவர்மர் சுந்தரபாண்டியர் காலக் கல்வெட்டுகள் **இரண்டாம்** விஜய நகர அரசர்களுள் விருப்பண்ணர் காலக் கல்வெட்டுகள் **இரண்டாம்** விஜய நகர அரசர்களுள் விருப்பண்ணர் காலக் கல்வெட்டு **ஒன்றாம்** மன்னர் பெயரற்றற முற்சோழர் காலக்கல்வெட்டு **ஒன்றாம்** மன்னர் யாரென்று அடையாளப்படுத்த முடியாத இராஜசேகரிக் கல்வெட்டு **ஒன்றாம்** பிற்சோழர் காலத்ததாகக் கொள்ளத்தக்க கல்வெட்டுகள் **ஆறும்** பிற்கால எழுத்தமைதிக் கல்வெட்டு **ஒன்றும்** இங்குள்ளன.

**மண்டலம்**, **வளநாடு**

பாண்டியர் பகுதி பாண்டிமண்டலம் என்று ஒரு கல்வெட்டிலும் சோழபாண்டிய மண்டலம் என்று ஒரு கவ்வெட்டிலும் குறிக்கப்பட்டுள்ளது. *7* வளநாடுகளின் பெயர்கள் எறும்பியூர் கல்வெட்டுகளில் பதிவாகியுள்ளன. அவற்றுள் பின்னாளில் பாண்டிகுலபதியான பாண்டிகுலாசனி வளநாடும் நித்த விநோத வளநாடும் தென்கரை வளநாடுகளாக இருந்தன. மதுரோதைய வளநாடு மதுரையை உள்ளடக்கியிருந்தது.

**ஊர்கள்**

*86* ஊர்களின் பெயர்களை எறும்பியூர்க் கல்வெட்;டுகள் கொண்டுள்ளன. அவற்றுள் ஊர் என முடியும் பெயர்கள் *31* இப்பின்னொட்டுடன் முடியும் ஊர்களில் மிகச் சிறியதாக மூன்றெழுத்துப் பெயர்களே உள்ளன. நான்கெழுத்துப் பெயர்கள் கொண்டவனாக *14* ஊர்களும் ஐந்தெழுத்து பெயர்களுடன் **ஐந்து** ஊர்களும் ஆறெழுத்துப் பெயர்கள் பெற்றவனாய் **நான்கு** ஊர்களும் உள்ளன. மிக நீண்ட பெயராகத் தடங்கண்ணிச்சிற்றூர் அமைய, பெருவேங்கூர் பிராமணக் குடியிருப்பாக விளங்கியது. தென்னூர் எறும்பியூரின் ஒரு பகுதியாக இலங்க, வேம்பற்றூர் எதிரிலிவ்சோழச் சதுர்வேதிமங்கலமாகவும் அறியப்பட்டது.

குடி என முடியம் ஊர்ப்பெயர்கள் *10* **ஆம்** மங்கலம் அல்லது சதுர்வேதிமங்கலம் எனும் கின்னொட்டுக் கொண்ட ஊர்ப்பெயர்கள் *7***ஆம்** புரம் என அமைந்த ஊர்ப்பெயர்கள் இரண்டும் உள்ளன. குடிகளின்

பூரிக்குடியே மிகச் சிறிய பெயராக அமைய, நெட்டணங்குடி நீண்ட பெயராக உள்ளது. சதுர்வேதி மங்களங்களுள் ஸ்ரீகண்டசதுர்வேதிமங்கலம் எறும்பியூரைத் தழுவியிருந்த பிராமணக் குடியிருப்பாகத் திகழ, அதன் அருகிலிருந்த பிற பிராமணக் குடியிருப்பாகத் திகழ, அதன் அருகிலிருந்த பிற பிராமணர் குடியிருப்புகளாகப் பெருவேங்கூர், உத்தம சீலிச் சதுர்வேதிமங்கலம், சோழமாதேவிச் சதுர்வேதி மங்கலம் ஆகியன் இருந்தன.

**பிடாகை**

பேரூர்களை சந்தித்திருந்த சிற்றூர்கள் பிடாகை எனப்பட்டன. எறும்பியூர் கல்வெட்டுகளில் வெளிப்படும் பிடாகைகள் பிராமணக் குடியிருப்புகளைச் சார்ந்தே இருந்தன. கரம்பை என்றும் அழைக்கப்பட்ட வீரநாராயணநல்லூர் ஸ்ரீகண்டசதுர்வேதி மங்கலத்தின் வடபிடாகையாகவும் இராஜாதிராஜ வதி மேற்பிடாகையாகவும் முருங்கூர் உத்தமசீலிச் சதுர்வேதி மங்கலத்தின் திசை சுட்டப்படாத பிடாகையாகவும் இராஜேந்திர சோழபரம் திரிபுவனமாதெவிச் சதுர்வேதிமங்கலத்தின் கீழ்ப் பிடாகையாகவும் குறிக்கப்படுகின்றன.

**அரசாணைகளும் அரசு அலுவலர்களும்**

எறும்பியூர் கல்வெட்டுகளில் **மூன்று** அரசாணைகள் பதிவாகியுள்ளன. அவற்றுள் ஒன்று மூன்றாம் இராஜராஜரின் **30**ஆம் ஆட்சியாண்டிலும் மற்றொன்று இரண்டாம் மாறவர்மர் சுந்தரபாண்டியரின் **11**ஆம் ஆட்சியாண்டிலும் **(**பொ.கா.**1249)** வெளியானவை. மூன்றாம் அரசாணை துணுக்குகாகச் சிதறியிருப்பதால் அதை வெளியிட்ட மன்னர் பெயரை அறியக்கூடவில்லை. சுந்தரப்பாண்டியரின் அரசாணை, அதைத் திருவாய் மொழிந்தருளியபோது அரசர் மாடக்குளக்கீழ் மதுரை அரண்மனையில் பள்ளியறைக்கூடத்துப் பீடம் மழவராயனில் வீற்றிருந்ததாகவும் எறும்பியூர்க் கோயில் தானத்தாருக்கும் தேவகன் மிக்கும் இவ்வாணை பிறப்பிக்கப்பட்டதாகவும் கூறுகிறது.

**சபை**

ஸ்ரீ கண்டசதுர்வேதிமங்கலம், பெருவெங்கூர், சோழமாதேவிச் சதுர்வேதிமங்கலம் ஆகிய மூன்று சபைகளின் நடவடிக்கைகள் குறித்த பதிவுகளை எறும்பியூர்க் கல்வெட்டுகள் கொண்டுள்ளன. இம்மூன்றனுள், எறும்பியூரைத் தழுவியிருந்த பிராமணர் குடியிருப்பு என்பதால் கோயில் சார்ந்த செயற்பாடுகளில் ஸ்ரீகண்டசதுர்வேதிமங்கலத்தின் ஆளுகை மிக்கிருந்ததைக் காணமுடிகிறது. **25** கல்வெட்டுகள் இவ்வூரின் பெருங்குறி மகாசபைக்கும் கோயில் சார்ந்த நிகழ்வுகளுக்கும் இடையிலிருந்த தொடர்பினை வெளிபடுத்துகின்றன. அவற்றுள் நிலம், நெல், குளநீர், வரிவிற்பனை தொடர்பானசை **12.** நிலவிற்பனைக்கு சபைப்

பொதுநிலங்களே ஆட்பட்டன. தனியர், கோயில் நிலங்களை இறையிலி செய்தமை குறித்த கல்வெட்டுகள் 10. அவற்றுள் ஒன்று, கோயலி; அறக்கட்டளைப் பொறுப்பையும் சபை ஏற்றுக்கொண்டமை தெரிவிக்கிறது. எஞ்சிய மூன்றனுள், நாடு வகைசெய்த அரசு அலுவலர் ஆணை ஏற்றுக் கோயிலிலிருந்த சேத்ரபாலர் வழிபாட்டிற்காக, சபை நிலக்கொடை அளித்தமை குறித்து ஒரு கல்வெட்டும், எறும்பியூரின் ஆட்சியமைப்பான ஊராருடன் இணைந்து நில விற்பனை மேற்கொண்டமை பற்றி மற்றொரு கல்வெட்டும், இறையிலியாக்கப்பட்ட கோயில் நிலங்களுக்கு வரி கேட்கும் சபை சார்ந்தவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனைகள் பற்றியதாகப் பிறிதொரு கல்வெட்டும் அமைந்துள்ளன. இந்த 25 ஆவணங்களில் சிலவற்றிலேயே சபை உறுப்பினர்கள் பலராகக் கையெழுத்திட்டுள்ளனர். சபை வாரியம் பற்றிய குறிப்பு ஒரே ஒரு கல்வெட்டில் இடம்பெற்றுள்ளது.

**ஆளுங்கணம்**

சீராப்பள்ளி மாவட்டக் கல்வெட்டுகளின் மிக அருகிக் காணப்படும் ஆளுங்கணம் எனும் குழு சார்ந்த கல்வெட்டுகள் எறும்பியூரில் 5 உள்ளன. ஐந்திலும் இக்குழு ஸ்ரீகண்டசதுர்வேதிமங்கல யாளுங்கணம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. கோயிலுக்கான கொடைப்பதிவுகளாக அமைந்துள்ள அவற்றுள், நான்கில் ஆளுங்கணம் சேர்ந்த மூன்று ஆடவர்களும் ஒன்றில், ஆளுங்கணத்தாருள் ஒருவரான திம்மிக்குழகிழான் நாராயணன் நக்கனின் பிராமணியான தத்தன்சேந்தியும் கொடையாளிகளாக வெளிப்படுகின்றனர்.

**வரிகள்**

இறை, எச்சோறு, வெட்டி, வேதினை, முட்டையாள் வாசலில் வந்த குடிமை என்னும் வரிகள் சோழர் கல்வெட்டுகளில் பரவலாக இடம்பெற்றுள்ளன. வெட்டி முட்டையாள் ஊர் ஒப்பில் வரும் வரியினமாக ஒரு கல்வெட்டில் சுட்டப்பட்டுள்ளது. முதல் இராஜாதிராஜரின் கல்வெட்டு வாசலி;ல வந்த முடிமையைத் திருக்கொற்றவாசலில் போந்த குடிமையாகக் சுட்ட, சுந்தரபாண்டியரின் கல்வெட்டுக் காராண்மை, மீயாச்சி, கடமை, அந்தராயம், விநியோகம், தருவதான அச்சு, காரிய ஆராய்ச்சி, பாடிகாவல், பொன்வரி, கோயிற்றமர்ப்பேறு ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. ஊரிடு வரிப்பாடு ஊராட்சியமைப்பு அரசுக்குச் செலுத்திய வரியினங்களைக் குறித்தது.

**மக்கள்**

சமூகத்தில் பிராமணர், வேளாளர் முதன்மை பெற்று விளங்க, மன்றாடி, வேட்கோவர், கொல்லர், தச்சர், வியாபாரி எனப் பல தொழிற்சார்ந்த மக்களையும் காணமுடிகிறது. சபை உறுப்பினர்களாக

இருந்த பிராமணர்களில் சிலர் தற்குறிகளாக விளங்கினாற் போலவே வேளாளர் சிலரும் தற்குறிகளாக இருந்தனர். பல உறவுப்பெயர்களைக் கல்வெட்டுகளில் காணமுடிகிறது. பிராமணர்தம் மனைவியர் பிராமணி என்று வேளாளர் மனைவியார் அகமுடையாள் என்றும் அழைக்கப்பட்டமையைக் காணமுடிகிறது. தந்தையாரின் இளைய சகோதரர்கள் சிறுதாதை என்றழைக்கப்பட்டனர்.

**கோயில் நிருவாகம்**

தேவர்கன்மி, மாகேசுவரக் கண்காணி எனப் பிரித்து அறியப்பட்டாலும் ஏறத்தாழ 9 சேழர் கல்வெட்டுகளில் ஸ்ரீகோயிலுடையோம் என்ற பொதுப்பெயரிலேயே கோயில் நிறுவாகத்தினர் பதிவாகியுள்ளனர். கண்டராதித்தர் காலந்தொட்டு முதல் இராஜராஜர் காலம் வரை கோயில் ஆட்சிபொறுப்பிலிருந்த இக்குழுவினர் கோயிலில் விளக்கேற்றத் தரப்பட்ட பொன், காசு, ஆடு ஆகிய கொடைப் பொருள்களைப் பெற்று அறக்கட்டளைகளைப் நிறைவேற்றியுள்ளனர்.

**விளக்குக் கொடை**

எறுப்பியூர் கோயிலில் 7 சந்திவிளக்குகளும் **நான்கு** நந்தா விளக்குகளம் **இரண்டு** பகல் விளக்குகளும் ஒளி தந்தன. நான்கு சந்தி விளக்குகள் ஸ்ரீகண்டசதுர்வேதி மங்கலத்து யாளுங்கணத்தைச் சேர்ந்த கங்காதர, நாராயண, தோணைய கிரமவித்தர்களால் வழங்கப்பட்டன. மூன்று சந்தியும் ஒளிதரவேண்டும். (பாடேநின்றெரிய) என்ற வேண்டலுடன் வழங்கப்பட்ட இவ்விளக்குகளுக்கு கங்காரதன் **ஐந்து** கழஞ்சுப் பொன்னும் தோணையன் 8 காசுகளும் இருவிளக்குகளை ஏற்ற நாராயணன் விளக்கிற்கு 34 ஆடுகள் என 68 ஆடுகளும் அறித்தனர். ஸ்ரீகோயிலுடையாரிடம் ஒப்படைக்கப்பட்ட இக்கொடைகளுள், கணவதி திருமன் ஒளிதர நாராயணன் வைத்த விளக்கு, பொது அரைப்பிடி நெய் கொண்டு ஏற்றப்பட்டது. நாராயணன் அறித்த மற்றொரு விளக்கு அவர் தந்த தரா நிலை விளக்கில் இறைவனின் வலப்பக்கம் ஏற்றப்பட்டது.

எழும்பியூர் கோயிலில் இருந்த "கோயில் பிள்ளையார்" என்றழைக்கப்பட்ட சேத்ரபாலதேவர் திருமன் மூன்று சந்திக்கும் மூன்று விளக்குகள் ஏற்றப்பட்டன. அதற்கான நிலக் கொடையை நாடு வகைசெய்த சுந்தரசோழநல்லூர் உடையாரான நல்லூரடிகள் ஆமல்லவர் ஆணைப்படி ஸ்ரீகண்டசதுர்வேதிமங்கல சபை வழங்கியது. முதல் இராஜேந்திரர் காலத்தே எறும்பியூரில் வாழ்ந்த மாறன்காரி இக்கோயில் சண்டேசுவரர் திருமன் சந்திவிளக்கேற்ற 34 ஆடுகள் தந்தார். மூன்று சந்தியும் ஆறு விளக்குகள் ஏற்ற விக்கிரமசோழர் காலத்தில் நிலம் வழங்கப்பட்டாற் போலவே சோழர் கால இறுதியிலும் கொடை வழங்கப்பெற்றதைத் துண்டுக் கல்வெட்டு உணர்த்துகிறது.

**வழிபாடு, படையல், விழா**

ஒரு குடத்தால் **இரண்டு** தூணி அளவு ஆற்றுநீர் கொணர்ந்து இறைவனை முழுக்காட்ட இராஜேந்திரசோழபுரி வியாபாரி கண்டியூருடையான் திருவன் பெரியாழ்வான் பெரியாழ்வான் அன்றாடுநற்காசுக்கு ஸ்ரீகண்டசதுர்வேதிமங்கல சபையாரிடம் நிலம் பெற்று உரிய தொகையளித்து அதை வரிநீக்கிக் கோயிலுக்குத் தந்தார்.

ஸ்ரீகண்டசதுர்வேதிமங்கலச் சீராளன் விழுமியான், சீராளன் அழகிய மணவாளன், கூற்றான் ஆகிய மூவரும் எறும்பியூர் இறைவனின் உத்தராயன, தட்சிணாயனத் தேவைகளுக்கும் பள்ளியறை நட்பிராட்டிக்கு உச்சிச்சந்தி அமுதிடவும் இருவருக்கு சட்டிச்சோறு வழங்கவும் மூன்று சந்திகளில் ஆறு விளக்குகள் ஏற்றவும் கோயிலிடம் நிலம் வழங்கினார். இரண்டாம் குலோத்துங்கச் சோழர் கால நாடாள்வார் ஒருவர் ஸ்ரீகண்டசதுர்வேதிமங்கல சபையாரிடம் நிலத்துண்டொன்றை விலைக்குப் பெற்றுக் கோயிலுக்களித்தார். கல்வெட்டு மிகவும் சிதைந்திருப்பதால் நாடாள்வாரின் பெயரையோ, கொடைக்கான காரணத்தையோ அறியக்கூடவில்லை.

எறும்பியூர்க் கோயில் இறைவனுக்கு நாளும் சிறுகாலைப் போதில் பருப்புப்கோனகம் படையலிட எறும்பியூர் ஏரார் 71ஃ2 மா ஊர்நிலத்தை இறையிலியாக்கிக் கோயிலுக்களித்தனர். ஸ்ரீகண்டசதுர்வேதிமங்கலத்து மத்யஸ்தரான ஆயிரவன் திருவாலந்துறை உடையானான உத்தமப்பிரியன் இறைவனுக்கு உச்சிச் சந்திச் சிறப்புத் திருப்போனகம் அளிக்க 131ஃ2 காசுக்கு விலைக்குப் பெற்ற நிலத்தை மேலும் 13ஃ12 காசு அளித்து வரிநீக்கிக் கோயிலுக்களித்தார். உச்சம்போதில் இறைவனுக்கு அமுது, வெற்றிலைப்பாக்குப் படையலிடப் பல துண்டு நிலங்கள் இணைத்து அறுமாச் செய்யாக வழங்கப்பட்டன.

இந்நிலத்துண்டுகளின் எல்லைகள் கட்டும்போது எறும்பியூர் இறைவனின் விளக்குப்புறம், நந்தவனப்புறம், மடைவிளாகம், திடல் நிலம் ஆகியவற்றோடு வேதிவேளான் இறைவனுக்கான விலைக்குப் பெற்ற நிலத்தின் மாறன் தூதுவன் பண்;படுத்தி வைத்த நிலம், கோயிலில் பதியம் பாடுவார் நிலம், எறும்பியூரார் எல்லை, குன்றப்போழன் பண்படுத்தி வைத்த விளக்குச்செய், மலை ஆகியன சுட்டப்படுகின்றன.

**பிற கோயில்கள்**

எறும்பியூர் கல்வெட்டுகள் மலை மேலேயுள்ள எறும்பீசர் கோயிலைக் குறிப்பது போலவே எறும்பியூரிலும் ஸ்ரீகண்ட

சதுர்வேதிமங்கலத்திலும் இவ்விரு ஊர்களைச் சூழவிருந்த பிற ஊர்களிலும் விளங்கிய கோயில்களையும் காட்டுகின்றன.

**தென்கயிலாயம்**

முதலாம் ஆதித்தரின் 18ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் வெளிபடும் இக்கோயில் ஸ்ரீசதுர்வேதிமங்கலத்தில் கண்டராதித்தரின் 4ஆம் ஆட்சியாண்டுவரை வாழ்ந்த கோயிலாகும். நெற்குன்றத்து நீலகண்டனிடம் விலைக்கு பெற்ற 6மாச் செய்யைத் தென்கயிலாய மகாதேவருக்கு நந்தாவிளக்கேற்ற நம்பன் கேசுவன் சபையாரிடம் 15 கழஞ்சுப் பொன்னளித்து வரிநீக்கிக் கோயிலுக்களித்தார். முதல் பராந்தகரின் 26ம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ள நிறைவடையாக கல்வெட்டு தென்கயிலாய மகாதேவருக்கு அமுதுக்காக அளிக்கப்பட்ட கொடையை சுட்டுகிறது. அதே அரசரின் 34ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, எறும்பியூர் நக்கநாதன் ஸ்ரீகண்டசதுர்வேதிமங்கலத்தின் வடபிடாகையில் 10 செய் நிலம் சபையாரிடம் விலைக்குப்பெற்று வரிநீக்கித் தென்கயிலாய மகாதேவர் முன் நந்தாவிளக்கேற்றக் கொடையளித்த தகவலைத் தருகிறது.

**துண்டு கல்வெட்டுகள்**

கோயில் கட்டுமானங்களின் சிதைவாலும் வரலாற்று நோக்கற்ற திருப்பணிகளாலும் நம் முன்னோர்களின் வாழ்க்கைப் பதிவுகளான கல்வெட்டுகள் கோயில்தோறும் துண்டாடப்பட்டுள்ளமை தமிழ்நாட்டு வரலாற்றின் மீட்டுருவாக்கத்திற்குப் பெரும் இடையூறாக உள்ளது. எறும்பியூரில் 45ம் மேற்பட்ட துண்டுக் கல்வெட்டுகள் கோயில் வெளிச்சுற்றின் பெரும்பாலான இடங்களில் காணப்படுகின்றன. மிகுந்த முயற்சிக்குப் பிறகே அவற்றுன் பெரும்பாலானவற்றைத் தொடர்புப்படுத்திப் பொருள் கொள்ளமுடிகிறது.. இவ்வூர் மலையடிவாரத்தே அமைந்திருந்த அகத்தீசுவரம் கோயிலுக்கு அளிக்கப்பட்ட கொடையை பற்றிய கல்வெட்டு 15 துண்டுகளாகச் சிதறியுள்ளது. கூத்தப்பார் திருவுடை மருதுடை நாயனார் கோயிலின் கொடைக் கல்வெட்டு முழுமையாகக் கிடைக்கவில்லை என்றாலும், பயனுள்ள மூன்று துண்டுகள் வழி அதன் திரண்ட பொருளைக் கொள்ளமுடிந்தது.

**காலம்**

இந்தியத் தொல்லியல் துறையின் பராமரிப்பிலும் இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகையின் கீழும் செழிப்புடன் விளங்கும் இத்திருக்கோயில் அப்பர் பெருமான் பாடல் பெற்றுப் பொ.கா. 6 நூற்றாண்டுக் கோயிலாகப் பொலிகிறது. செங்கல் தளியாக இருந்த இக்கோயிலின் விமானத்தை பொ.கா.952க்கு முன்னால் வீரநாராயணனான செம்பியன் வேதிவேளான் கற்கட்டுமானமாக மாற்றினார். பிற்சோழர்

காலத்தே அம்மன் திருமுன், சுற்று விரிவு எனக்கோயில் கூடுதல் கட்டுமானங்களைப் பெற்று விஜயநகலக் காலம்வரை புரவலர்களின் தழுவலில் செழித்திருந்தது.

## முடிவுரை

- தமிழகத்தில் காணப்படும் சிறப்புமிக்க திருத்தலங்களில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் எறும்பீஸ்வரர் கோவில் மிகச்சிறப்ப மிக்கதாக உள்ளது. இந்த திருத்தலம் சோழர்கள் காலம் தொடங்கி இந்நாள் வரை இவ்வூர் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு ஊராகத் திகழ்கிறது என்பதை அறிகிறோம்.

- இக்கோயிலின் சிறப்பு சோழர் கால முதல் தொடங்கியது அதன் பிறகு வந்த பல்லவர் பாண்டியர் விஜயநகர மற்றும் நாயக்கர்கள் காலத்திலும் திருவெறும்பூர் தமிழகத்தில் வரலாற்றில் சிறப்புக்குரிய ஒரு தலமாக காணப்படுகிறது.

- இந்தியத் தொல்லியல் துறையின் பராமரிப்பிலும், இந்து சமய அறநிலைத்துறையின் ஆளுமையிலும் செழிப்புடன் விளங்கும் இத்திருக்கோயில் அப்பர் பெருமான் பாடல் பெற்ற தலம் *6* ஆம் நூற்றாண்டுக் கோயிலாகப் பொலிகிறது. செங்கல் தனியாக இருந்த இக்கோயிலின் விமானத்தைப் *952*க்கு முன்னால் செம்பியன் வேதிவேளான் கற்கட்டுமானமாக மாற்றினார். பின் சோழர் காலத்தே அம்மன் திருமுன் சுற்று விரிவு எனக் கோவிலில் கூடுதல் கட்டுமானங்களைப் பெற்று விஜயநகரக் காலம் வரை புரவலர்களின் தழுவலில் செழத்திருந்தது.

- ஒரு ஆலயத்தின் சிறப்பை வெளிபடுத்துவது அதன் சிறப்பக் கலையாகும். இந்த எறும்பீஸ்வரர் திருக்கோவில் சிறப்பு மிக்கதாக காணப்படுகிறது. அக்கால மக்களின் வாழ்க்கை சித்தரிக்கும் சிற்பங்களும், ஓவியங்களும் சிறப்புமிக்கதாக காணப்படுகின்றன.

## குறிப்புகள்

- ❖ தினமணி *18.07.1986* பிற்சோழர்கள் அல்லது விஜயநகர மன்னர்கள் காலக் கோயிலமைப்பு என்கின்றனர். கி.அமர்நாத் இராமகிருஸ்ணாவும், சி.சண்முகவேலும். திருவெறும்பூர் திருத்தல வரலாறு, புனிதர் பேரவை, திருவெறும்பியூர், *2004*, ப.*34* (பெயர் சூட்டா நிலையில் இனிவரும் குறிப்புகள் அனைத்தும்

இந்நூலாசிறியர்களின் கருத்தாய் அவர்தம் நூலில் இடம் பெற்றனவே.)

- ஏழு கன்னியர்களிகளின் சிலைகள் என்று ஓரிடத்திலும் ஒரு கன்னிமார் இடம்பெறவில்லை என்று மற்றோர் இடத்திலும், ஏழுகன்னியர்கள் அனைவரும் என்றும் பிறிதோர் இடத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.
- இதைக் குறிப்பிடும்போது 'மடப்பள்ளி மண்டபத்தின் கீழ்ப் பாதுகாப்பு அறை ஒன்று இருப்பதாக பொதுமக்கள் கூறுகின்றனர்' என்று எழுதியுள்ளனர்.
- திருத்தல நூலசிறியர்கள் இச்சிறப்பத்தை குறிப்பிடவில்லை.
- *13.04.1999:* தினமணி, தினமலர் *11.04.1999* தோரணத்தையும் மிக அழுகுடன் காட்சி தருகின்றன. இவ்வாறு திருவெறும்பூர் எறும்பீஸ்வரர் கோயில் சிறபகலையில் சிறப்பு பெற்று விளங்குகிறது.
- திருத்தல வரலாறு நூலாசிரியர்கள் *2* என்கின்றனர். ப.*100:* யுசுநு *1914: 96-142.*
- யுசுநு *1892: 100*இ *100*யுஇ *101* ஸ்ரீ யுசுநு *1914: 108*இ *109*இ *127* மூன்று கல்வெட்டுகள் மீள்பதிவாகியிருப்பதை அறியாத நிலையில் திருத்தல வரலாறு நூலாசிரியர்கள் *50* கல்வெட்டுகள் இந்தியத் தொல்லியல் துறையால் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் குறித்துள்ளனர். ப. *100.*
- ***SII 4: 547 – 549; 13:50, 51, 88, 110-114, 138-140, 162-166, 283, 286, 287; 19:372,***
- ***395; 34: 96-142.***
- ***SII 34: gf;. 106, 98.***
- ***Deccan Chronicle 22.6.2018 jpdfud; 21.6.2018.***
- ***SII 34: 119, 110, 118.***
- ***SII 34: 108, 111, 115.***
- ***SII 34: 101-105, 112, 117, 123, 126, 127, 129, 130-133.***